கடவுளை தேடி தொலைந்து போனேன்

இயேசு கிறிஸ்து என்னை மீட்டெடுத்தார்

(உள்ளத்தை உருகவைக்கும் ஓர் உயிர்துடிப்புள்ள சாட்சி)

ஆசிரியர்

சகோ. M. அர்ஜுன் சாமுவேல்

பதிப்பாசிரியர்

சுவி. டாக்டர் எஸ். தாயப்பன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கடவுளைத் தேடி தொலைந்து போனேன்

இயேசு கிறிஸ்து என்னை மீட்டெடுத்தார்

(உள்ளத்தை உருகவைக்கும் ஓர் உயிர்துடிப்புள்ள சாட்சி)

ஆசிரியர்

M.அர்ஜுன் சாமுவேல்

141, 4TH, DIVISION, WARD NO.20, AMBEDKAR CIRCLE,
GUNDALPET, KARNATAKA - 571 111.
CHAMARAJANAGARA DT CELL NO:7411894570

பதிப்பாசிரியர்

சுவி.டாக்டர் **எஸ்.தாயப்பன்**

நன்கொடை ரூ.5/-

[illegible]

[illegible]

1. [illegible]	[illegible]	[illegible]
[illegible]		
2. [illegible]	[illegible]	[illegible]
3. [illegible]	[illegible]	[illegible]
4. [illegible]	[illegible]	[illegible]
5. [illegible]	[illegible]	[illegible]
6. [illegible]	[illegible]	[illegible]
7. [illegible]	[illegible]	[illegible]
8. [illegible]	[illegible]	[illegible]
9. [illegible]	[illegible]	[illegible]
10. [illegible]	[illegible]	[illegible]
11. [illegible]	[illegible]	[illegible]
12. [illegible]	[illegible]	[illegible]
13. [illegible]	[illegible]	[illegible]
14. [illegible]	[illegible]	[illegible]
15. [illegible]	[illegible]	[illegible]
16. [illegible]	[illegible]	[illegible]
17. [illegible]	[illegible]	[illegible]
18. [illegible]	[illegible]	[illegible]
19. [illegible]	[illegible]	[illegible]
20. [illegible]	[illegible]	[illegible]
21. [illegible]	[illegible]	[illegible]
22. [illegible]	[illegible]	[illegible]
23. [illegible]	[illegible]	[illegible]
24. [illegible]	[illegible]	[illegible]
25. [illegible]	[illegible]	[illegible]
26. [illegible]	[illegible]	[illegible]
27. [illegible]	[illegible]	[illegible]
28. [illegible]	[illegible]	[illegible]
29. [illegible]	[illegible]	[illegible]
30. [illegible]	[illegible]	[illegible]
31. [illegible]	[illegible]	[illegible]
32. [illegible]	[illegible]	[illegible]
33. [illegible]	[illegible]	[illegible]
34. [illegible]	[illegible]	[illegible]
35. [illegible]	[illegible]	[illegible]
36. [illegible]	[illegible]	[illegible]
37. [illegible]	[illegible]	[illegible]
38. [illegible]	[illegible]	[illegible]
39. [illegible]	[illegible]	[illegible]
40. [illegible]	[illegible]	[illegible]
41. [illegible]	[illegible]	[illegible]
42. [illegible]	[illegible]	[illegible]
43. [illegible]	[illegible]	[illegible]
44. [illegible]	[illegible]	[illegible]
45. [illegible]	[illegible]	[illegible]
46. [illegible]	[illegible]	[illegible]
47. [illegible]	[illegible]	[illegible]

48. சொர்க்கம் சொந்தமாகும் டாக்டர் ஆனந்த் ஜோஷி		10/-
49. யார் இந்த மனிதர் இயேசு?		10/-
50. இராம ஜென்ம பூமி டாக்டர் உறையூர் வளவன் (தமிழ், ஆங்.)	5,000	5/-
51. மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை R. ஸ்டான்லி	5,000	5/-
52. மனமாற்றத்தைப் பெருக்குவது எப்படி? R. ஸ்டான்லி	5,000	5/-
53. வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்	5,000	5/-
54. நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000	5/-
55. ஓர் அவசர அறைகூவல்	5,000	5/-
56. கல்வாரி ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	5,000	5/-
57. திரித்துவம் பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/-
58. இஸ்லாமியர்களின் கேள்விக்குப் பதில் சாலமோன் ராஜா	5,000	5/-
59. இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/-
60. ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	35,000	5/-
61. திரும்பிப் பார்க்கிறேன் டாக்டர் புஷ்பராஜ்	3,000	5/-
62. ஒரு சரஸ்வதியின் கதை டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
63. திருமறை தரிசனங்கள் டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
64. திருமறை துணுக்குகள் டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
65. கள்ள உபதேசம் உருவாக காரணம் திருப்பூர் சாலமோன்	3,000	5/-
66. இந்தியாவில் சாதனை படைத்த யூதர்கள்	3,000	5/-
67. இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைகள்	3,000	5/-
68. இஸ்ரேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்	3,000	5/-
69. பாவம் பலவிதம் Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
70. யகோவா தேவன் Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
71. இப்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்கள் Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
72. 666 பயோசிப் எச்சரிக்கை! சிஸ்டர் மரியா	6,000	5/-
73. இல்லவே இல்லாத இந்து மதம் பீட்டர் அலெக்சாண்டர்	3,000	5/-
74. கர்வாப்சி பீட்டர் அலெக்சாண்டர் (தமிழ், ஆங்கிலம்)	3,000	5/-
75. மந்தை பெருக மகத்தான மாற்றங்கள்	5,000	5/-
76. உயிர் கொடுத்து உயர்த்தும் உன்னத தேவன்		5/-
77. மதமாற்ற தடைச்சட்டம் பீட்டர் அலெக்ஸாண்டர்		5/
78. சிலுவையில் சிந்திய 7 சிவப்பு முத்துக்கள் உறையூர் வளவன்		5/-
79, வேத இரகசியங்கள்		5/-
80. இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி சாந்தி தேவி	10,000	2.50/-
81.மோட்ச வாழ்வுக்கு வழி என்ன சாந்தி தேவி	5,000	2.50/-
82. இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் செலின் சாமுவேல்	3,000	2.50/-
83. திருமறையும் ஜாதிகளும் டாக்டர் உறையூர் வளவன்	3,000	2.50/
84. எப்படி ஜெயிக்கனும்? டாக்டர் கிளிஃபோர்டு குமார்	3,000	2.50/-
85. ஞானஸ்நானமும், பரிசுத்தவ ஆவியும் அபிஷேகமும் Rev. ராபர்ட் டேனியல்	3,000	2.50/-
86. உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? R.ஸ்டான்லி (தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்)		2.50/-
87. ஸ்ரீஇராமஜெயம்		2.50/-
88. மருத்துவத்தை வென்ற சாட்சிகள் பால்ராஜ் துரை		2.50/-
89. இந்துமத சித்தாந்தங்களும் திருமறையும் உறையூர் வளவன்		2.50/
90. மனித நேயம் காக்கும் கிறிஸ்தவம்		2.50/-
91. ஈடு இணையில்லாத ஈவு - உறையூர் வளவன்		2.50/-
92. இயேசு இணையற்றவரா? - ஆர். ஸ்டான்லி		2.50/-
93. இரண்டு கேள்விகள் - Dr.சாம் ஏசுதாஸ்	3,000	2.50/-
94. DVD ஆனந்த புதுவாழ்வு (telefilm)	100/-	
95. DVD அமாவாசை (telefilm)	100/-	
96. VCD என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், ஹிந்தி, மலையாளம்)	6,50,000	10/-
97. VCD எழுந்து காட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
98. VCD முகதிக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
99. VCD கதாகாலட்சேபம் (தமிழ்)	20,000	10/-
100. VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (தமிழ்)	10,000	10/-

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ். தாயப்பன்

12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ 1,
சேலையூர் போஸ்ட், சென்னை 600 073.
தொலைபேசி : 044 22234256. மின்னஞ்சல் sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1.M.O., D.D.. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை M.O. பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. M.O., DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும். வி.சி.டி. அனுப்ப தபால் செலவு மட்டும்; கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 வி.சி.டி. வரை அனுப்ப ரூ.50/- 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வங்கியில் பணம்
கட்டி புத்தகம் பெற...

கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணம் செலுத்திவிட்டு எங்களுக்கு தகவல் அளித்தால், நீங்கள் வேண்டும் புத்தகங்கள் / CD அனுப்பி வைக்கப்படும். வங்கிக் கணக்கு விவரம்:

எஸ். தாயப்பன் (S.THAYAPPAN)

சிட்டி யூனியன் பேங்க், சிட்லபாக்கம், சென்னை 600 064
A/c எண்: 295001001980044. IFS Code : CIUB 0000295

பிறகு கண்டிப்பாக தகவல் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்:

T. கார்த்திகேயன்,

8680859894,

044 - 2223 4526, 044 - 4355 2899

கடவுளைத் தேடி தொலைந்து போனேன் இயேசு கிறிஸ்து என்னை மீட்டெடுத்தார்

எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இனிய தெய்வீகக் குரலில் 'சுப்ரபாதம்' கேசட்டின் ஒலி என் வீட்டு பூஜை அறையில் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. காலை 5 மணி. அம்மா மஞ்சள் தேய்த்துக் குளித்து முழுகின மணமும், மைசூர் சந்தன சோப்பின் மணமும் கலந்து ஒரு சுகந்த நற்கந்த வாசனையோடு, குளித்த ஈரத் தலையில் ஒரு குற்றாலம் துண்டை இறுகக் கட்டியவாறு பூஜை அறையில் விளக்கேற்றி, ஊதுபத்தி கொளுத்தி பயபக்தியோடு, சின்ன மணி அசைத்து கற்பூர ஆராதனை காட்டும் சப்தம் கேட்கிறது. அப்பாவும் பூஜையில் கலந்து கொள்கிறார். குழந்தைகளாகிய நாங்கள் இன்னும் எழுந்திருக்காமல் இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருப்பதை பார்த்ததும் இரண்டாம் முறையாக அம்மா சற்று குரலை உயர்த்திக் கத்துகிறார்கள். 'இன்னும் எழுந்திருக்கலையா? நேரமாச்சு. இல்லைன்னா உங்கமேல ஒரு பக்கெட் தண்ணீர்தான் விழும். ஆமா செல்லமா கண்டிப்போடு கூடிய ஒரு எச்சரிப்பு.

ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மகிழ்ச்சியான குடும்பம்

எழில் மணிவண்ணனாகிய நான் எனது அண்ணன் அன்பரசு, தம்பி அறிவரசு ஆகிய மூவரும் ஒரு ரூமில் படுத்திருந்தோம். அண்ணன் அன்பரசு, 'டேய் எழில், அறிவு எழுந்திரிங்கடா. அம்மா செகண்ட் வார்னிங் குடுத்தாச்சு' என்றான். என் அக்கா கலையரசி அம்மாவோடு படுப்பாள். அவள் அம்மா போலவே சீக்கிரம் எழுந்து கிச்சனில் காப்பி போட்டுக் கொண்டிருந்தாள். என் அம்மாவாகிய சாந்தாவுக்கும் என் அப்பாவாகிய முத்தப்பனுக்கும் நாங்கள் நான்கு பிள்ளைகள். அப்பா ரெவின்யூ இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தார். அம்மா தர்மபுரி சென்ட்ரல் கோஆபரெடிவ் பேங்க்கில் வேலை பார்த்தார். இரண்டு பேருக்கும் கைநிறைய சம்பளம். எங்களை கண்ணின் மணியைப் போல காத்து வளர்த்தார்கள்.

தெய்வீக பக்தியுள்ள எங்கள் குடும்பம்

பக்தி வைராக்கியம் கொண்ட பாரம்பரியம், ஜாதி சம்பிரதாயங்களில் மிகவும் ஊறிப்போன ஒரு வன்னியர் கவுண்டர் குடும்பம் எங்கள்

குடும்பம். பக்தியும், சந்தோஷமும், சமாதானமும் எந்த ஒரு குறையும் இல்லாத வசதி வாய்ப்புள்ள ஒரு குடும்பம். அக்கம்பக்கம், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் எல்லோர் மத்தியிலும் மதிக்கத்தக்க ஒரு குடும்பமாக, நாங்கள் கும்பிட்டு வந்த தெய்வங்கள் எங்களை மிகவும் சந்தோஷமாக ஆசீர்வதித்து நடத்தி வந்ததற்காக நாங்கள் குடும்பமாக கோயில் கோயிலாக போய் வருவோம்.

சிறு வயது முதலே மிகவும் கண்டிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் நல்லொழுக்கத்திலும் பக்தியிலும் நாங்கள் வளர்க்கப்பட்டோம். எங்கள் வீட்டுப் பூஜை அறையில் சிவன், முருகன், பிள்ளையார், கண்ணன், திருப்பதி வெங்கடாசலபதி, ஓம்சக்தி படம் எல்லாம் இருக்கும்.

ஒரு நல்ல குடும்பத்திற்கு உதாரணமாக இருந்தோம்

ஒரு குடும்பம்னா இப்படித்தான் இருக்கணும். புருஷன் பொண்டாட்டி எப்படி இருக்கணும். அதுக்கு உதாரணம்ப்பா இவங்க. என்ன ஒரு அன்பு, பாசம், நேசம், ஒருத்தர் பேச்சை ஒருத்தர் கேட்டுக்கிட்டு.... நம்ம கண்ணே பட்டுடும் போல இருக்கு அவ்வளவு ஒரு அன்னியோன்யம்! அவங்களுக்கு இருக்கக்கூடிய புள்ளைங்க! ஓ... புள்ளைங்களா அதுங்க! எல்லாம் மணிப்பா. தங்ககட்டிங்க. புள்ளைங்கள்னா இப்படி இருக்கணும். வீட்டை எப்படி மெயின்டெயின் பண்ணணும்! எல்லாத்தையும் அவங்களைப் பார்த்துக் கத்துக்கிடணும். சும்மா சொல்லக்கூடாது. அவங்க கும்பிடுகிற தெய்வங்கள் அவங்களை நல்லா ஆசீர்வதிச்சிருக்கப்பா என்று நாலு பேர் சொல்ல நானே என் காதுபட கேட்டிருக்கிறேன். அப்போ நான் கும்பிடுகிற தெய்வத்துக்கு நன்றி சொல்லுவேன்.

என் குடும்பத்தில் உள்ள அனைவருடைய நெற்றியிலும் திருநீர் பளிச்சென்று தெரியும். நெற்றிக்கு இடாமல் எங்களைப் பார்க்கவே முடியாது. எல்லோருமே ரொம்ப நல்லாவே படிச்சு மார்க் வாங்குவோம். எல்லா டீச்சர்களுக்கும் எங்களை ரொம்பப் பிடிக்கும். 'ஐயோ அந்த பிள்ளைங்க இருக்கிற இடமே தெரியாதே. அவ்வளவு அமைதியா அவர்கள் இருப்பாங்க' என்று எல்லாருமே எங்களைப் பத்தி சொல்லுவாங்க.

எங்கள் குடும்பத்தில் சூறாவளிப் புயல்

யார் கண் பட்டதோ ரொம்ப அமைதியா, மகிழ்ச்சியா போய்க் கொண்டிருந்த எங்க குடும்பத்தில் புயல் போல சூறாவளி வீச ஆரம்பிச்சது. 1997ஆம் ஆண்டு ரொம்ப நல்லா படிச்சுக்கிட்டு இருந்த என் அண்ணனின் நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் தெரிய ஆரம்பித்தது. மிக அதிகமாக தனிமையை நாட ஆரம்பித்தான். தானாகப் பேச, தானாக சிரிக்க, எல்லாரோடயும் சண்டை போடவும் ஆரம்பிச்சிட்டான். அவனோட டோட்டல் பிகேவியரே மாறிப் போச்சு. அவனுக்குப் பைத்தியம் பிடிச்சிடுச்சு அப்படீன்னு மத்தவங்க சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க. அவனோட செயல்பாடுகளும் அப்படித்தான் இருந்தது. ஏன்டா இப்படி பண்றேன்னு கேட்டா நான் என்ன தப்பு பண்ணினேன்னு எதிர்த்துக் கேட்பான். சொல்லிச் சொல்லி கேட்காததுனால பல தடவை எங்க அப்பா அவனை அடித்தும் விட்டார். அடித்தும், கட்டிப் போட்டும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அடிச்சிட்டு புள்ளையை அடிச்சிட்டேனேன்னு, வேதனையில எங்க அப்பா சாப்பிடமாட்டார். எங்க அப்பா சாப்பிடலேன்னு (எங்க அம்மா சாப்பிடமாட்டாங்க. அப்பா அம்மா ரெண்டு பேரும் சாப்பிடலேயேன்னு எங்களுக்குப் பசிச்சாலும் நாங்களும் சாப்பிடாம வெறும் தண்ணியை மட்டும் குடிச்சிட்டு படுத்துருவோம்)

இரவு தனியா 20 கிலோ மீட்டர் ரயில் டிராக்கில் நடந்திருக்கான்

ஒருநாள் இரவு 11 மணி இருக்கும். நாங்க எல்லாரும் நல்லா தூங்கிட்டு இருந்தோம். என்னோட அண்ணன் மெதுவா எந்திரிச்சு வாசக்கதவை திறந்து, அதை அப்படியே திறந்த மாதிரியே விட்டுட்டு பக்கத்தில் இருக்கிற ரயில்வே ட்ராக்கில 20 கிலோ மீட்டர் நடந்தே போயிருக்கான். ராத்திரி நேரத்தில் இருட்டில தன்னந்தனியா நடந்திருக்கான். பட்டப் பகல்ல அந்த ரயில் ட்ராக்கில நடக்கிறதுக்கே பயப்படுவாங்க. ஆனா இவன் தானா போயிருக்கான். ஏன்டா இப்படி போனேன்னு அவனை கேட்டா, யாரோ என்னை வாவான்னு கூட்டிட்டுப் போனா மாதிரி இருந்துச்சு. அதுனாலதான் போனேன் என்கிறான்.

ஏதோ செய்வினைக் கோளாறு! யாரோ மந்திர சூன்யம் வச்சிருக்காங்க. அதுனாலதான் இவன் இப்படி இருக்கான் என்று

பலர் கூறினர். சிலர் மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கு. சிலர் பைத்தியம் பிடிச்சிருக்கு. சிலர் ஏதோ தெய்வ குற்றம் நடந்திருக்கு, அதனாலதான் இதுபோல குடும்பத்தில குழப்பம் என்றனர். அந்தக் கோயிலுக்குப் போங்க, இந்தக் கோயிலுக்குப் போங்க. இந்தப் பரிகாரம் செய்யுங்கள். இந்த வேள்வி செய்யுங்கள். இந்த யாகம் பண்ணுங்க. இங்கே அங்கப் பிரதோஷணம் செய்யுங்க, அங்கே விரதம் இருந்து இருமுடிகட்டிட்டுப் போங்க. பாவ நிவர்த்தி பண்ணுங்க. சிலர் ஜோஸியம் பாருங்கன்னாங்க. இப்படி ஆளாளுக்கு, ஒன்னு சொன்னாங்க.

எங்க குடும்ப நிம்மதியை இழந்தோம்.

போகாத கோயில் இல்லை, செய்யாத பரிகாரங்கள், பூஜை இல்லை. யார் என்ன சொன்னாலும் உடனே செஞ்சோம், எப்படியாவது எங்க அண்ணனுக்கு ஒரு விடுதலை கிடைக்காதா? அவன் பழையபடி ஆயிடமாட்டானா, சுகம் பெற மாட்டானா என்ற ஒரு ஏக்கம், ஆதங்கம். எங்க குடும்பத்து சந்தோஷம், சமாதானம், நிம்மதி எல்லாமே போச்சு. நாங்க சிரிச்சே பல மாசங்கள் ஆயிடுச்சு. பல டாக்டர்களிடம் கூட்டிட்டு போனோம். உடற்கூறு ரீதியா, மருத்துவ ரீதியா உங்க பையனுக்கு எந்தப் புராபளமும் இல்லை. ஹி இஸ் பெர்பெக்லி ஆல்ரைட். மனநிலை பாதிக்கப்பட்ட மாதிரியும் தெரியலை. எதுக்கும் நீங்கள் ஒரு சைக்கிரியாட்ரிஸ்ட்டை கன்சல்ட் பண்ணுங்க என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். அவனோட நிலைமை ரொம்ப மோசமாயிட்டதால அவனை ஸ்கூலிலிருந்து நிறுத்திட்டாங்க. அதுனால அவனால அப்புறம் ஸ்கூலுக்குப் போகமுடியலை. வீட்டிலேயே தனியா இருந்தான்.

அண்ணனை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்த்தோம்

அப்பா அம்மா வேலைக்கும், நாங்க ஸ்கூலுக்கும் போறதுனால வீட்டைப் பூட்டிட்டுதான் போனோம். அவனை தனியா ஒரு ரூம்ல போட்டு பூட்டிட்டுதான் போவோம். வேற வழி இல்லை. அவன் அன்னிக்கு ராத்திரி போனமாதிரி எங்காவது போயிட்டான்னா என்ன பண்றதுன்னு புரியாம அவனை பூட்டி வச்சுட்டுத்தான் போற மாதிரி ஆயிடுச்சு. அப்படி போன பிறகு எங்க யாருக்கும் நிம்மதி இருக்காது.

எப்படி இருக்கானோ. புள்ளைய இப்படி பூட்டி வச்சுட்டு போறமேன்னு நெஞ்சு முழுக்க ஒரே துக்கமும் துயரமும் வேதனையும்தான் இருக்கும். திரும்பி வந்து பார்த்தா வீட்டில பல சாமான்கள் உடைஞ்சு கிடக்கும். எந்தப் பொருளும் வச்ச இடத்தில இருக்காது. நிலமை இன்னும் மோசமாகிட்டே போச்சு. வேற வழி இல்லாம அண்ணனை கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில சேர்த்தோம். இந்த மன உளைச்சலினால் என் அப்பா நிம்மதியை இழந்தார். வீட்ல நிம்மதி கிடைக்காததுனால அப்பாவுக்கு குடிப்பழக்கம் ஆரம்பிச்சது. அப்பப்போ குடிச்சவரு பிறகு தினமும் குடிக்க ஆரம்பிச்சிட்டார். 2006ல் நான் புகைப்பழக்கத்திற்கு அடிமையாகிப் போனேன். மனுஷனுக்கு நிம்மதி இல்லன்னா வேற என்ன செய்வான்? குடும்பத்தில எல்லாருமே நடைப்பிணமா மாறிப்போனோம்.

தெய்வத்தின் மீது இருந்த வெறுப்பில் நான் நாத்திகனாக மாறினேன்

எனக்கு எல்லா தெய்வங்களின் மேலேயும் ஒரு வெறுப்பு வந்திடுச்சு. சாமி கும்பிட்டு என்ன பிரயோஜனம்? ஒரு சுகமும் கிடைக்கலையே. நாங்க மனசறிஞ்சு யாருக்கும் எந்த துரோகமும் பண்ணல. எந்த தீங்கும், பாவமும் செய்யலை. எங்களுக்கு ஏன் இந்தக் கொடூரமான ஒரு நிலைமை? குடும்பமா நாங்க எல்லாருமே உங்களைத்தானே நம்பினோம், கும்பிட்டோம். உங்களுக்கு என்ன குறை வச்சோம்? எங்க குடும்பத்தில ஏன் இப்படி ஒரு அவலம்? உன்னை நம்பி இருக்கிற, உன்னை மட்டுமே நம்பி இருக்கிற எங்களுக்கு வந்த சோதனை உனக்குத் தெரியாதா? நீ தெய்வந்தானே? இல்லை வெறும் கல்லா? உனக்கு கண்ணு இருக்குல்ல. நாங்க படுகிற கஷ்டம் உனக்கு தெரியலையா? நினைக்க நினைக்க எனக்கு எல்லா தெய்வத்தின் மேலேயும் நம்பிக்கை போயி, நான் தெய்வம்னு ஒண்ணும் கிடையாது. ஒரு புண்ணாக்கும் இல்லை. எல்லாம் நம்மள நாமே ஏமாத்திக்கிறோம். நம்மோட மூட நம்பிக்கைகளை வச்சு பலர் புழைச்சுக்கிட்டு இருக்காங்க. அப்படீன்னு ரொம்ப ஸ்டிராங்கா ஃபீல் பண்ண ஆரம்பிச்சுட்டேன். தெய்வங்கள் மேலேயே எனக்கு ஒரு வெறுப்பு வந்திருச்சு, ஒரு முழு நாத்திகனா மாறிட்டேன்.

அம்மாவுக்கு வேலை இழந்தார்.

இந்த நிலைமை எங்க அம்மாவையும் பாதிச்சுடுச்சு. அவங்களும் மனநிலை பாதிக்கப்பட்டு, தானா பேசுறது, சிரிக்கிறது. எதுக்கெடுத்தாலும் சண்டை போடறது. கோபம், எரிச்சல், காட்டுக் கத்தல், அழுகை என்று வீடு ஒரே நரகமா மாறிப் போச்சு! அவங்க வேலை செய்த பேங்க்லயும் கொஞ்சம் இப்படி நடந்துக்கிட்டாங்க போல இருக்குது. அவங்க வேலையை விட்டு அனுப்பிட்டாங்க. எங்க குடும்பத்துக்கு கிடைச்ச இரண்டு வருமானங்களிலே ஒரு வருமானம் இழந்தோம். வருமானம் கம்மியாயிடுச்சு. செலவோ பல மடங்கு ஆயிடுச்சு. மருத்துவ செலவு, ஜோஸ்யம் பாக்குறது, குறி கேக்கிறது, யார் என்ன பரிகாரம் சொன்னாலும் செய்யுறது. இதோட எங்களோட படிப்புச் செலவு. சமாளிக்க முடியலை. இதுவரை வசதியா வாழ்ந்திட்டோம். இப்போ விழி பிதுங்கிடுச்சு. மேனேஜ் பண்ண முடியலை. குடும்பத்தை நடத்த மாசா மாசம் கடன் வாங்க வேண்டிய நிலை. வீட்டைச் சுற்றி ஒரே கடன். கழுத்து நெறிபட்டது. விழி பிதுங்கிடுச்சு. இந்த சமயத்துல அம்மாவோட நிலைமை ரொம்ப மோசமாகி அவங்களையும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்க்கும்படி ஆயிடுச்சு. இதுக்குள்ள எப்படியோ நான் +2 முடிச்சுட்டேன். ஒரு டிகிரி வாங்கிட்டா ஒரு வேலைக்குப் போகலாமே என்று காலேஜில் சேர அப்ளிகேஷன் போட்டேன்.

காலேஜ்ல இடம் கிடைச்சும் படிக்க முடியடிலை

சென்னை பிரசிடென்சி காலேஜ்ல B.sc (Geology) சீட் கிடைச்சது. 2 மாசம் போனேன். அதுக்குமேலே ஃபீஸ் கட்ட முடியலை. காலேஜை விட்டு வெளியே வந்தேன். வேலைக்கு ட்ரை பண்ணினேன். ஒன்றும் கிடைக்கலை. கொஞ்ச நாள் சும்மா இருந்தேன். அடுத்த வருஷம் மறுபடியும் காலேஜுக்கு ட்ரை பண்ணினேன். கோயம்புத்தூர் மஹாராஜா இன்ஜினீயரிங் காலேஜ்ல B.sc IT ல இடம் கிடைச்சது. ஜாயின் பண்ணினேன். நாலு மாசம் படிச்சேன். அதுக்கு மேலே ஃபீஸ் கட்ட முடியலை. வந்துட்டேன். பிறகு எப்படியோ கரெஸ்பாண்டென்ஸ்ல B.A. (Public Administration) முடிச்சேன். சென்னைல ஒரு கம்பெனியில் எனக்கு வேலை

கிடைச்சது. வேலைக்குப் போயிட்டு தினமும் சாயங்காலம் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில என்னோட அம்மாவையும், அண்ணனையும் போயி பார்ப்பேன். அவங்களைப் பார்த்துட்டு வந்தப் பிறகு என்னோட வேதனை இன்னும் அதிகமாச்சே ஒழிய குறையல. எல்லாம் விதி! கர்ம வினை. மந்திர சூனிய கட்டுகளுக்கு இவ்வளவு வல்லமை இருக்குதா? எங்க குடும்பத்தையே இப்படி ஒண்ணுமில்லாம நாசமாக்கிடுச்சே. யார் இந்த செய்வினையை செஞ்சிருப்பா? ஏன் செஞ்சாங்க? இதிலேருந்து விடுபட என்ன வழி?

கும்பிட்ட தெய்வங்கள் கைவிட்டுடுச்சு

இதுவரைக்கும் நாங்க கும்பிட்ட தெய்வங்கள் எல்லாம் எங்களை கைவிட்டுடுச்சு. அதுங்களால அந்த செய்வினை கட்டுகளை, மந்திர சூன்ய தந்திரங்களை மாற்ற முடியலை. ஒரு விடுதலையை கொடுக்க முடியலை. ஒரு மந்திரீகத்தை ஒரு மந்திரவாதியினாலதான் எடுக்க முடியும்னு சிலபேர் சொன்னாங்க. அதுக்காக ஒரு மந்திரவாதியை தேடிப்போனேன். அவன் அதைச் செய்யணும் இதைச் செய்யணும் என்று ஆயிரத்தெட்டு சொல்லி எங்கிட்ட இருந்து 7000 ரூபாய் வாங்கினான். சரி எப்படியாவது ஒரு விடுதலை கிடைச்சா சரின்னு நானும் குடுத்துட்டேன். ஆனா ஒண்ணும் நடக்கலை. இன்னும் பணம் கேட்டான். போடான்னுட்டு வந்துட்டேன். நாங்க செய்யாத பூஜை இல்லை. போகாத கோயில்கள் இல்லை. கும்பிடாத தெய்வங்கள் இல்லை. செய்யாத பரிகாரங்கள் இல்லை. ஆனா எங்கள் கண்ணீரை துடைக்கும் தெய்வம், வேதனையை போக்கும் தெய்வம் எங்கும் இல்லை.

என் அண்ணனை இழந்தோம்

என் அண்ணனின் நிலைமை மேலும் மோசமாகியது. அவன் கிரானிக் சைக்கிரியாட்ரிக் பேஷண்ட்டா ஆயிட்டான். குணப்படுத்த முடியாது, வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று ஆஸ்பத்திரியில் கூறிவிட்டார்கள். வேறு வழியின்றி வீட்டிற்கு அழைத்து வந்தோம். எங்கள் வீட்டில் எப்போதும் அழுகையும், பூஜையும்தான். ஆனால், எதுவும் என் அண்ணனைக் காப்பாற்றவில்லை. எங்களை எல்லாம்

பரிதவிக்கவிட்டு விட்டு அவன் ஒரு நாள் இறந்துவிட்டான். உலகமே இருண்டது போல் ஆனது. வாழ்க்கை மிகவும் வெறுமையானது. அது எங்கள் குடும்பத்தில் விழுந்த முதல் பேரிடி. ஆஸ்பத்திரிக்குப் போன பிறகு என் அம்மாவின் நிலைமை இன்னும் மோசமாகியது. அண்ணனைப்போல் எங்கள் அம்மாவின் நிலைமையும் ஆகிடக்கூடாது என்று ஆஸ்பத்திரியிலிருந்து அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்தோம். ஆனால், அம்மாவின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போச்சு. அப்பா ரிட்டயர் ஆனார். நல்லவேளை. என் அக்காவிற்கும் சென்னையில் ஒரு வேலை கிடைத்தது. நானும் சென்னையிலேயே ஒரு வேலை பார்த்தேன். எங்கள் இருவரின் சம்பளத்தில் எங்கள் குடும்பம் எப்படியோ தட்டுத்தடுமாறி நடந்துகொண்டு இருந்தது. என் தம்பியும், அப்பாவும் அம்மாவைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

என் தம்பியும் பலியானான்

வீட்டில் இருந்த பணக் கஷ்டத்தால் என் தம்பியின் பள்ளிப் படிப்பு பாதிக்கப்பட்டது. எப்படியோ வீட்டிலிருந்தே படித்து கம்ப்யூட்டரில் டிப்ளமோ வாங்கினான். குடும்பத்தில் நிலவிய சூழ்நிலை, பணக்கஷ்டம், கண்ணுக்கு முன்னாடியே அண்ணன் பட்ட பாடுகள், அவனின் மரணம், அம்மாவின் பரிதாபமான நிலைமை! அக்காவும் நானும் உடன் இல்லாது சென்னையில் வேலையின் நிமித்தமாக பிரிந்து இருந்தது எல்லாமும் என் தம்பியையும் பாதித்து அவனும் மனநிலை பாதிக்கப்பட்டான். மந்திர சூனியம் என் அண்ணனுக்கு மட்டும் செய்யப்படவில்லை போலும். முழுக் குடும்பத்திற்கும் செய்யப்பட்டிருக்கிறது. என் அண்ணன் இறந்தான். என் அம்மாவின் நிலைமை மோசமாகியது. இப்போது என் தம்பியும் பாதிக்கப்பட்டுள்ளான். கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய நிலையும் மோசமாகி என் தம்பியும் இறந்தான். அடிமேல் அடி. இடிமேல் இடி. 'பட்டகாலிலேயே படும். கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி எங்கள் குடும்பத்திற்காகவே சொல்லப்பட்டதுபோல் இருந்தது. இனி அடுத்து என் வீட்டில் யார் பலியாகப் போகிறார்களோ என்று ஓர் பயமும் எங்களை ஆட்டிப் படைத்தது.

அம்மாவுக்கு கண்களில் புரை, சர்க்கரை வியாதியும் வந்துவிட்டது

மனநிலை பாதிப்போடு என் அம்மாவிற்கு சர்க்கரை வியாதியும் வந்துவிட்டது. அதனால் இரு கண்களிலும் புரை வந்துவிட்டது. ஒரு கட்டத்தில் இரு கண்களிலும் புரையினால் பார்வை தடைபட்டது. டாக்டரிடம் காட்டினோம். சுகர் இருப்பதால் இப்போது ஆபரேஷன் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டனர். கொடுமை... பரிதாபம் எங்களோட கஷ்டம், துன்பங்கள் வேற யாருக்குமே வரக்கூடாது. எங்கள் எதிரிகளுக்குக்கூட வரக்கூடாது. அம்மா பார்வை இழந்து, மனநிலை பாதிக்கப்பட்டு, அண்ணனை இழந்து, தம்பியையும் காவு கொடுத்து, கடலில் முழுகி சூறாவளிப் புயலில் சிக்கியதுபோல ஆர்ப்பரித்தது எங்கள் குடும்பம் தத்தளித்தது. கஷ்டத்தின் மேல் கஷ்டம், சோதனையின் மேல் சோதனை. அடுத்தடுத்து பிரச்சனை, இழப்பு, மரணம், உதவுபவர் யாருமில்லை என்கிற நிலையில் உடல், மனநிலை பாதிப்புக்களால் நொந்து நூலாகிப் போயிருந்த எனக்கு இதுவரை கும்பிட்ட தெய்வங்களெல்லாம் இப்படி எங்களை பரிதவிக்கவிட்டு விட்டனவே என்று எல்லா தெய்வங்கள் மேலும் எனக்கு அளப்பரிய கோபமும், எரிச்சலும் ஏமாற்றமும் வந்தாலும், சேட்டை செய்யும் புள்ளையை ஒரு அம்மா அடித்துவிட்டால், அழுதுகொண்டு, ஒரு மூளையில் கோபத்தில் வீராப்பாக, முரண்டு பிடித்து மூஞ்சை தூக்கி வைத்துக்கொண்டு இருக்கும் சிறு குழந்தை! மறுபடியும் அம்மா நம்மை கூப்பிட்டு சமாதானப்படுத்தமாட்டாளா என்ற ஏக்கத்தோடு காத்திருக்கும் பிள்ளையைப் போல! நானும் தெய்வத்தின் மீது கோபம் கொண்டு! வெறுத்துப்போய் சாமி கும்பிடாமல் இருந்தாலும்! உள்ளத்தில் ஒரு ஏக்கம். இப்பவாவது நாம் கும்பிட்ட தெய்வங்கள் நம்மீது கருணை காட்டி மனமிரங்கி நம் பிரச்சனைகளை, கஷ்டங்களை தீர்த்து வைக்காதா? சந்தோஷம் சமாதானத்தை திரும்பவும் தராதா என்று ஒரு எதிர்பார்ப்பு, ஏக்கம் இல்லாமல் இல்லை.

பெங்களூரில் இன்ட்டர்வியூ

இந்த சூழலில் என் ஊருக்கு அருகில் இருப்பதால் பெங்களூருவில் வேலை செய்ய முடிவெடுத்தேன். ஆகவே வேறு வேலைக்கு

முயற்சி செய்துகொண்டிருந்தேன். அந்த சமயத்தில் இன்போசிசில் ஆட்கள் தேவை என்று அறிந்து அதற்கு அப்ளிகேஷன் போட்டிருந்தேன். ஒரு நாள் என்னைப் பெங்களூருக்கு இன்டர்வியூவிற்கு அழைத்தார்கள். முழு நம்பிக்கையோடு சென்றேன். நிறையப் பேர் வந்திருந்தனர். ரிட்டன் டெஸ்ட். ஆப்டிடியூடு டெஸ்ட், குரூப் டிஸ்கஷன் என்று பல ரவுண்டுகள் முடிந்துவிட்டன. பைனல் ரவுண்டு, நேரடி இன்ட்டர்வியூவிற்காக காத்திருந்தேன். என் அருகில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள்.

பேபியை முதன் முதலாக சந்தித்தேன்

அவளும் இதுவரை நடந்து முடிந்த எல்லா டெஸ்ட்டுகளிலும் தேறி என்னைப்போல அடுத்த ரவுண்டுக்கு காத்திருந்தாள். நல்ல அதிக ஆடம்பரம் இல்லாமல் அமைதியாக இருந்த அவளிடத்தில் பேச தொடங்கினேன். எங்கே இருந்து வருகிறீர்கள் என்று நான் கேட்டாள். சொன்னேன். அவள் பெங்களூரைச் சேர்ந்தவள். ஆனால், தமிழ் நன்றாகப் பேசினாள். பெயர் பேபி என்று கூறினாள். இதுதான் அவளுக்கு முதல் இன்டர்வியூ. அடுத்த ரவுண்டு காலிங் வரை காத்திருக்கும் நேரத்தில் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது என் குடும்பத்தையும், அம்மாவின் நிலை பற்றியும் சொல்லும்படி ஆச்சு.

நாங்களும் இந்துவாக இருந்து கிறிஸ்தவர்கள் ஆனவர்கள்தான்

அவளும் 'நாங்களும் இந்து மதத்தில் இருந்தவர்கள்தான். இதுவரைக்கும் அனுபவிக்காத ஒரு சந்தோஷம், சமாதானம் எங்களுக்கு கிடைச்சது என்றார். அதுக்கப்புறம் நாங்க இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக மாறினோம்.

தாயாராருக்கா, அம்மாவிற்காக ஜெபம்

உங்க அம்மாவோட சுகத்துக்காக நீங்க இயேசுவிடம் வேண்டிக்கோங்க. நிச்சயமாக அவர் உங்க அம்மாவை குணப்படுத்துவார். நானும் உங்க அம்மாவுக்காக தினமும் ஜெபிப்பேன்' என்றாள். என்னோட கஷ்டத்தைப் பார்த்து ஆறுதலா ஏதோ சொல்றா. எத்தனையோ பேர் சொன்னாங்களே. அதைப்

பண்ணுணுங்க. இங்கே போங்க. இந்தப் பரிகாரம் செய்யுங்கன்னு சொல்லலையா? அதுபோல இவளும் சொல்லுகிறாள் என்று நான் சீரியஸாக அதை எடுத்துக்கொள்ளவில்லை. நான் ஒன்றும் பதில் சொல்லாமல் லேசான புன்னகையோடு தலையை மட்டும் லேசாக ஆட்டினேன். அதற்குள் அவளை பைனல் இன்ட்டர்வியூவிற்கு அவளை உள்ளே அழைத்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து மலர்ந்த முகத்தோட வந்தாள். எனக்கு வேலை கிடைச்சிடுச்சு என்று சொன்னாள். கங்கிராட்ஸ் என்றேன்.

எனக்கு வேலை கிடைக்கலை

'தேங்க்யூ. உங்களுக்கும் கிடைக்கும். விஷ்யூ பெஸ்ட் ஆப் லக்' என்றாள். அந்த பெண்ணின் செல் நம்பரை வாங்கிக் கொண்டேன். கொஞ்ச நேரத்தில் என்னையும் உள்ளே கூப்பிட்டார்கள். இன்டர்வியூ நடந்தது. என்னை வெயிட்டிங் லிஸ்டில் வைத்துவிட்டார்கள். என்னோட லக் அவ்வளவுதான். எனக்கு சில வருஷங்கள் அனுபவம் இருந்தது. அந்தப் பொண்ணுக்கு எக்ஸ்பீரியன்ஸ் எதுவுமே இல்லை. ஃபிரஷ் கேன்டிடேட். அவளுக்கு வேலை கிடைச்சிடுச்சு. எனக்கு கிடைக்கலை. என்ன சொல்ல? வாழ்க்கையில எத்தனையோ தோல்விகளை, இழப்புகளை, ஏமாற்றங்களைப் பார்த்தாச்சு. அதுல இதுவும் ஒண்ணு. இட் இஸ் ஓகே என்று நான் என்னையே தேற்றிக்கொண்டேன்.

அவளின் செய்திகளுக்குப் பதிலே தரமாட்டேன்

வெளியே வந்து பஸ்ஸுக்கு காத்திருந்தேன். அப்போ ஒரு போன் கால் வந்தது. அந்த பெண்தான் பேசினாள். இன்ட்டர்வியூ என்ன ஆச்சு என்றாள். வெயிட்டிங் லிஸ்ட் என்றேன். 'டோன்ட் வொரி. கண்டிப்பா உங்களுக்கு கால் வரும்' என்றாள். இயேசுவிடம் வேண்டிக்கோங்க. நானும் உங்களுக்காக, உங்க அம்மாவுக்காக ஜெபிப்பேன்' என்றாள். 'தேங்க்யூ' என்று கட் பண்ணினேன். பிறகு (SMS) மெசேஜ் அனுப்புவாள். முக்கால்வாசி இயேசுவைப் பத்தி இருக்கும். நான் பதில் போடமாட்டேன். ஒரு நாள் எனக்குப் போன் பண்ணினாள். என்னோட மெசேஜுக்கு நீங்க பதிலே போடறது இல்லையே. ஏன் என்றாள்.

தெய்வம் என்பதெல்லாம் ஒரு மூடநம்பிக்கை

'அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. 'எனக்கு இயேசுவைப்பத்தி ஒண்ணும் தெரியாது. அதுனால பதில் எதுவும் போடலை. அதுவுமில்லாம என்னைப் பொறுத்தவரையில் இந்த உலகத்தில் தெய்வம்னு ஒண்ணு கிடையவே கிடையாது. எல்லாம் ஹம்பக், மாய்மாலம், ஏமாற்று வேலை, இதெல்லாம் ஒரு மூட நம்பிக்கை. விரக்தியில பேசுறேன்னு நினைக்காதீங்க. வெற்றியும் தோல்வியும் நம்ம கையிலதான் இருக்கு. நான் சரியா பிரிபேர் பண்ணலை. அதுனால எனக்கு கிடைக்கலை. அடுத்த தடவை நல்லா பிரிபேர் பண்ணிட்டு போனா கிடைக்கும். இதுல தெய்வம் என்ன செய்யும்?

இயேசுவும் ஒரு மனிதர்தானே!

இயேசு என்ன செய்வாரு? அவரும் ஒரு மனுஷன் தானே. மனுஷனா இருந்தவர்தானே. அதுனாலதான் அவரை சிலுவையில அறைய முடிஞ்சது. தெய்வமா இருந்தா சிலுவையில மரிப்பாரா? விடுங்க. நான் எல்லா தெய்வத்தையும் கும்பிட்டுப் பார்த்தாச்சு. எதுவும் எங்களுக்கு உதவலை. இயேசு மட்டும் உதவிடப் போறாரா? விடுங்க. உங்களுக்கு நம்பிக்கை இருந்தா நீங்க அவரைக் கும்பிடுங்க. என்னை வற்புறுத்தாதீங்க. நான் எல்லாத்தையும் பார்த்துட்டேன்' என்றேன். அவள் விவாதம் பண்ணலை. OK, OK நான் உங்களை கம்பெல் பண்ணலை. ட்ரை பண்ணிப் பாருங்கன்னு சொன்னேன். காசா பணமா? ஒன்லி பிரேயர்தானே? என்று சமாதானமாகச் சொன்னாள்.

எனக்கும் பெங்களூரிலேயே வேலை கிடைத்தது

வாரம் ஒருதடவையாவது போன் செய்வாள். அம்மா எப்படி இருக்கிறார்கள் என்று விசாரிப்பாள். நான் 'ஏதோ இருக்காங்க' என்று ஒரு சுரத்தில்லாமல் சொல்லுவேன். நான் தொடர்ந்து ஜெபிச்சுட்டு வர்றேன்' என்பாள். 'ஓ... தேங்க்யூ' என்று ஃபார்மாலிட்டிக்கு ஒரு வார்த்தை சொல்லுவேன். இதுக்கு ஊடால எனக்கு பெங்களூரிலேயே ஒரு வேலை கிடைச்சது. அங்கே ஜாயின் பண்ணிட்டேன். நான் பெங்களூர்ல இருக்கும்போது ஒருநாள் அந்தப் பொண்ணு என்னைப்

பார்த்துட்டா. அர்ஜுன் ஆபிசில் அர்ஜுன் என்று அழைப்பார்கள். 'ஹலோ எழில், எப்படி இருக்கீங்க? இங்கே எப்படி? பிறகு எனக்கு அங்கேயே வேலை கிடைச்சு நான் பெங்களூருக்கு வந்ததை சொன்னேன். 'என்கிட்ட சொல்லவே இல்லையே நீங்க' என்றாள். இப்பதான் வந்து ஜாயின் பண்ணினேன். சர்ப்ரைஸா ஒருநாள் உங்க முன்னாடி வந்து நிக்கணும்னு நினைச்சேன்' என்று சொல்லி சமாளிச்சேன்.

அம்மா ரொம்ப ப்லவீனம் ஆயிட்டாங்க

பெங்களூரிலிருந்து வாரம் ஒரு தடவை என் ஊருக்குப் போயிடுவேன். நாங்க அப்போ ஒரு வீட்டின் முதல் மாடியிலே வாடகைக்கு குடியிருந்தோம். அப்படி நான் ஒரு தடவை போயிருக்கும்போது அம்மா அந்த மாடிப்படி ஏற முடியாமல் அப்படியே நின்று காலை தூக்கி வச்சு படியேற முடியாம, முன் படியில கையை வச்சு அப்படியே குனிஞ்சு கை, கால்ல ஏறியதைப் பார்த்தேன். என் கண்களிலே கண்ணீரே வந்துடுச்சு. அம்மா ரொம்ப பலவீனமாயிட்டாங்க. இன்னும் கொஞ்ச நாள்தான் வண்டி ஓடும் போல. அவங்க நிலையைப் பார்த்தவுடனே என்னோட துக்கத்திற்கு அளவே இல்லை. என் குடும்பத்தில அண்ணனை இழந்தேன். பின்பு தம்பியை இழந்தேன். என் அருமை அம்மாவையும் இழக்க எனக்கு மனசில்லை. என்ன செய்ய? எல்லா தெய்வத்துகிட்டேயும் கும்பிட்டுப் பார்த்தாச்சே. ஒண்ணும் நடக்கலையே.

நான் பெங்களூர்ல இருந்ததுனால அந்த பொண்ணு பேபியை நான் அடிக்கடி மீட் பண்ணும்படி ஆச்சு. அவகிட்ட பேசும்போது, அவகூட இருக்கும்போது ஏதோ ஒரு ஆறுதல். என்னை தைரியப்படுத்தி நாலு வார்த்தை சொல்லுவா. அந்த நட்பு, தொடர்பு எனக்கு பிடிச்சிருந்தது. அவளுக்கும் என் நட்பு பிடிச்சிருந்ததுன்னு நினைக்கிறேன். அதுனாலதான் அடிக்கடி போன் பண்ணினா. என்னை சந்திக்கவும் செய்தாள்.

இயேசுவே மெய்யான தெய்வம் என்றாள்

இயேசுவும் ஒரு மனுஷந்தான். அதுனால தான் அவரையும் சிலுவையில அறைய முடிஞ்சதுன்னு சொன்னீங்க. அப்போ உங்ககிட்ட நான் எதுவும் வாதம் பண்ண விரும்பலை. இப்போ

சொல்றேன். இயேசுதான் இந்தப் பிரபஞ்சத்தையும் சகல ஜீவராசிகளையும் படைச்சவரு. நாம யாரும் கஷ்டப்படணும், நோயில அவஸ்தைப் படணும்கிறதுக்காக அவர் நம்மளை படைக்கலை. நாம எல்லாரும் அவர் கூட நல்லா சந்தோஷமா நித்தியத்துக்கும் இருக்கணும்கிறதுக்காகத்தான் அவர் படைச்சார். ஆனா நாம பாவம் செஞ்சு அவரோட அன்பை விட்டு விலகிப் போனோம். பாவத்துக்கு உண்டான தண்டனை மரணம், நரகம்.

சொர்க்கம், நரகம் வெறும் கற்பனை அல்ல

இந்தப் பூமியில மனுஷ வாழ்க்கை கொஞ்ச நாளைக்குத்தான். 70 அல்லது 80 வருஷம். அதுக்குப்பிறகு ஒரு நித்திய வாழ்க்கை இருக்கு. நாம செய்யற நன்மை தீமைக்கேற்ப சொர்க்கம், நரகம்னு நியாயத் தீர்ப்பு கிடைக்கும். நாம் கெட்டு நரகத்தில கிடந்து அவஸ்தைப்படுறது தேவசித்தமல்ல. அவர் நியாயாதிபதி. பாவத்துக்குத் தண்டனை கொடுக்காம இருக்க முடியாது. அதுனால நம்மோட பாவத்துக்கு நமக்கு வரவேண்டிய தண்டனையை, பாவமே செய்யாத அவர் தம்மேல ஏற்றுக்கிட்டு நமக்காக மரித்தார். அவர் சிந்திய இரத்தத்தால நமக்கு பாப விமோசனம் கிடைச்சது. அதுக்காகவே அவர் மனித அவதாரம் எடுத்து வந்தார். அவர் பிறக்கிறதுக்கு 700 ஆண்டுகளுக்கு முன்னாடியே இது தீர்க்க தரிசனமாக சொல்லப்பட்டது என்றாள்.

இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை

நம்ம இரத்தத்தால செய்த பாவத்தை ஒரு பாவமில்லாத இரத்தத்தாலதான் போக்க முடியும். அப்பேர்ப்பட்ட பாவமில்லா ரத்தம் கடவுள் ஒருத்தர்கிட்ட மாத்திரம்தான் இருக்கு. வேற யார்கிட்டயும் கிடையாது. அதுனாலதான் நம்மையெல்லாம் படைச்ச அந்த கடவுளான இயேசுவே மனித அவதாரம் எடுத்து வந்து, நமக்காக தம்மோட பாவமில்லாத இரத்தத்தை சிந்தும்படி ஆச்சு. இதை பைபிள் மாத்திரம் சொல்லலை. இந்து மத வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், பிரமாணங்கள் எல்லாமே சொல்லுது. இதைப்பத்தி இன்னும் அதிகமா தெளிவா ஆதாரத்தோட தெரிஞ்சுக்கிடணும்னா திரு. தாயப்பன் ஐயா எழுதின புத்தகங்களை

வாங்கிப் படிச்சுப்பாருங்க. உங்க சந்தேகம் எல்லாம் தீரும்.

வேற எதனாலேயும் யாராலேயும், எந்த நற்செயல்களினாலேயும் வேண்டிக்கிறதுனாலேயோ, வேறு எந்த நற்கிரியை உண்டாலும் நாம இதுவரைக்கும் நாம செஞ்ச பாவங்களை போக்கவே முடியாது. இந்த பாவங்களினாலேயும், அதுனால வரக்கூடிய சாபங்கள்னாலேயும் தான் நம்ம வாழ்க்கையில துன்பம் துயரம் வேதனை நோய் நொடி எல்லாமுமே. ஒரு பெரிய லெக்சரே தந்தா. நான் யோசித்தேன். அதுக்கப்புறம் அவள் தாயப்பன் அய்யாவின் சில புத்தகங்களையும் கொடுத்தா. படிச்சேன். அப்படியே ஆடிப்போயிட்டேன். மனுஷன் எவ்வளவு தெளிவா! ஆதாரத்தோட எல்லாத்தையும் எழுதி இருக்காரு!

மதம் மாறத் தேவை இல்லை

உங்கள் சந்தேகங்கள், கேள்விகள் எல்லாம் நியாயமானதுதான். நீங்க இதுக்காக மதம் மாறணும்கிற அவசியம் இல்லை. மனம் மாறுங்க. இந்த ஜாதி மதம் எல்லாமும் மனுஷங்க உண்டாக்கினதுதான். கடவுள் உண்டாக்கலை. இயேசு கிறிஸ்து ஒரு மதத் தலைவர் அல்ல. ஒரு மதத்தை ஸ்தாபிக்கணும்கிறதுக்காக அவர் மனித அவதாரம் எடுத்து வரலை. கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. ஒரு மார்க்கம். உங்க குடும்பத்தில இருக்கிற செய்வினைக் கட்டுக்கள், மந்திர சூன்யங்களைப் போக்க இயேசு கிறிஸ்து ஒருத்தராலதான் முடியும். எங்க எங்கேயோ போனீங்க. எதை எதையோ கும்பிட்டீங்க. எத்தனையோ பரிகாரங்களை செய்திட்டீங்க. உங்க பிரச்சனைகள் இதுவரைக்கும் தீரலை. இயேசுகிட்ட வந்து பாருங்க. உங்க பிரச்சனை, கஷ்டங்களுக்குத் தீர்வு கிடைக்குதா இல்லையான்னு பாருங்க. என்னை சோதித்துப் பாருங்கன்னு சவால்விட்ட ஒரே தேவன் இயேசு ஒருத்தர் மாத்திரம்தான். என்னோட பல சந்தேகங் களுக்கு விடை தெளிவு திரு. தாயப்பன் அய்யா புத்தகங்கள்ல கிடைச்சது.

என்னோட அம்மாவுக்காக ஜெபம் பண்ணு பேபி

அந்த சமயத்திலதான் அம்மாவோட இந்த பரிதாபகரமான

நிலைமையைப் பார்த்துட்டு நானே பேபிக்கு போன் செய்து 'என்னோட அம்மாவுக்காக கொஞ்சம் ஜெபம் பண்ணு' என்று கேட்டேன். அவன் ஜெபிச்சான். போனை கொண்டு போயி எங்க அம்மா காதில வச்சேன். அது அவங்களுக்கு பெரிய ஆறுதலா இருந்தது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்னை வற்புறுத்தி சர்ச்சுக்கு கூட்டிட்டுப் போனான். குண்டல் பேட்டல இருக்கிற 'கிரேஸ்' சர்ச் பாஸ்டர் பிலிப் சேதுமாதவன், அவரோட சன் பாஸ்டர் சாம் பிலிப்பு இரண்டு பேர்கிட்டேயும் அறிமுகம் செய்து வச்சா. பாஸ்டரும் சர்ச்சில இருந்த எல்லாருமே என் அம்மாவுக்காகவும் எங்க குடும்பத்துக்காகவும் அழுது கண்ணீர் விட்டு பாரத்தோட ஜெபம் பண்ணினாங்க. படிப்படியா இயேசு என் அம்மாவை குணப்படுத்தினார்.

விடுதலை, பரிபூரண விடுதலை கிடைச்சது!

மந்திர சூன்ய செய்வினை கட்டுகளிலே இருந்து விடுதலை கிடைச்சது. முன்னாடி படுத்த படுக்கையா இருந்தவங்க எழுந்து நடமாட ஆரம்பிச்சாங்க. நல்லபடியா பேச ஆரம்பிச்சாங்க. முன்னாடி அவங்க செயல்பாடுகள்ல இருந்த மாறுபட்ட செயல்கள் எல்லாம் மாறிச்சு. வீட்டு வேலைகள், சமையல் எல்லாமும் செய்ய ஆரம்பிச்சாங்க. பாவம் எங்க அப்பாதான் எங்க அம்மாவுக்கு இப்படி ஆனப்பிறகு எல்லா வேலையும், சமையலும் செய்வாரு. எங்க எங்கயோ எல்லாம் போயி, எத்தனையோ தெய்வங்களை கும்பிட்டும், ஆயிரத்தெட்டு பரிகாரங்களை செய்தும், ஆயிரக்கணக்கில் செலவு செஞ்சும் கிடைக்காத விடுதலையை இயேசு கொடுத்துட்டார். **'அவரண்டையில் வருகின்ற எவரையும் அவர் புறம்பே தள்ளுகின்ற தேவன் அல்ல' என்றும் 'அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போனதில்லை' என்றும் சத்திய வேதம் கூறுகிறதே.**

இந்த நல்ல ஆண்டவரை இன்னும் ஜனங்க புரிஞ்சுக்காம இருக்காங்களே அது எவ்வளவு உண்மை. அப்பா.... நாங்க பட்ட துன்பம், சந்திச்ச இழப்புகள், அவமானம் கொஞ்சமா நஞ்சமா? இப்போ நினைச்சாலும் உடம்பெல்லாம் நடுங்குது. எங்களோட எதிரிக்கு கூட இதுபோன்ற ஒரு அவல நிலை ஒருபோதும் வரக்கூடாதுன்னுதான் நான் வேண்டிக்கிறேன். என்னோட

ஆதங்கம் எல்லாம் இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல ஆண்டவரை, நம்ம பாவங்களை எல்லாம் மன்னிக்கிற ஒரு தேவனை, நோய்களையும், கஷ்டங்களையும், செய்வினை கட்டுகளையும் நீக்கி விடுதலை தருகின்ற ஒரு தெய்வத்தை, ஏன் நம்ம ஜனங்க இன்னும் புரிஞ்சுக்காம இருக்குறாங்க? இயேசு கிறிஸ்துவைப் பத்தி கிறிஸ்தவங்க மத்தவங்ககிட்ட எடுத்துச் சொல்றாங்கன்னா அது இவங்களுக்குக் கிடைச்ச சந்தோஷம், சமாதானம், விடுதலை கஷ்டப்படுகிற மத்தவங்களுக்கும் கிடைக்கணுமேங்கிற ஒரு நல்ல எண்ணத்திலதான் சொல்றாங்க!

மதமாற்றமல்ல, மனமாற்றமேதேவை

மதமாற்றமல்ல, மனமாற்றம்தான் தேவை. இந்துக்களை கிறிஸ்தவங்களா மாத்துறதுனால கிறிஸ்தவங்களுக்கு என்ன கிடைக்குது? ஒண்ணும் இல்லையே. இதை ஏன் கிறிஸ்துவை எதிர்க்கிறவங்க புரிஞ்சுக்கிடமாட்டேங்கிறாங்க? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டா நன்மைதான் கிடைக்குமே தவிர, தீமையே இல்லை. கடவுளை இதுவரைக்கும் யாராவது பார்த்து இருக்காங்களா? இல்லையே. பார்த்திருக்க முடியாது. ஏன்னா அவருக்கு உருவமே இல்லைன்னு இந்து மத வேதங்களே சொல்லுது. மனிதக் கற்பனை யில அவருக்கு ஒரு உருவம் கொடுத்து, அதை ஒரு சிலையா வடிச்சு, அதுக்கு மனைவி, புள்ளைகுட்டி எல்லாம் உண்டாக்கி அந்த சிலைக்கு பூஜை புனஷ்காரம், அபிஷேகம், ஆராதனை எல்லாம் செஞ்சா அது நம்ம கஷ்டத்தை போக்குமா? யாரோட மனசையும் நான் புண்படுத்தணும் கிறதுக்காக இதை நான் எழுதலை. கொஞ்சம் யோசிச்சு பாருங்க.

எது உண்மையான தெய்வம்?

என்னோட ஆதங்கம். நான்பட்ட வேதனை, கஷ்டம், எங்க குடும்பம் அனுபவிச்ச இந்த சொல்லொண்ணா துன்பம் துயரம், வேற யாரும் அனுபவிக்கக் கூடாதுங்கற ஒரு நல்ல எண்ணத்தில இதை எழுதுகிறேன். என்னைப் போல கோயிலுக்குப் போனவன், சாமி கும்பிட்டவன், பரிகாரங்கள் செய்தவன் யாரும் இருக்க முடியாது. ஆனா என்ன பிரயோஜனம்? விடுதலை கிடைக்கலையே.

பிரச்சனை, நோய் நொடி தீரலையே. இப்போ இயேசுகிட்ட வந்த மாத்திரத்திலே எல்லாமே நீங்கிப் போச்சே. அப்போ எதுங்க உண்மையான தெய்வம்?

இயேசு ஒரு வெளிநாட்டு கடவுள் அல்ல

இயேசு மத்தவங்க சொல்ற மாதிரி ஒரு வெளிநாட்டுக் கடவுள் இல்லைங்க. அவர் ஆசியாவில பிறந்தவரு. அவரோட சீடர்கள் எல்லாரும் ஆசியாவில பிறந்தவங்கதான். அவரைப்பத்தி எழுதப்பட்டு இருக்கிற பைபிள் எழுதப்பட்ட மொழி நம்ம ஆசியா கண்டத்து மொழி. எந்த மொழியா இருந்தா என்னங்க? எந்தக் கடவுளா இருந்தா என்னங்க? எது நம்மோட கண்ணீரை துடைக்குதோ, எது நமக்கு வழிகாட்டுதலாக, எது நமக்கு உறுதுணையா, ஆறுதலா, சந்தோஷத்தை சமாதானத்தை, கொடுக்குதோ நோய்களை, பாவங்களைப் போக்குதோ, கஷ்ட, நஷ்டங்களிலிருந்து விடுதலை கொடுக்குதோ, அதுதானங்க நமக்கு வேணும்? வேற எதுக்காகங்க நாம சாமியை கும்பிடுறோம்? நம்ம அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி ஒரு மதத்தை, ஒரு வழிபாட்டு முறையை ஃபாலோ பண்ணினதுனால நாமும் அதை அப்படியே கண்ணை மூடிக்கிட்டு பின்பற்றுகிறோம்.

உலகத்திலேயே நாம சார்ந்து இருக்கிற மதம்தான் சிறந்தது. படிக்கிற வேதம்தான் ஈடு இணை இல்லாதது என்று மற்ற எல்லா மதத்தையும் வேதங்களையும் அலசி ஆராய்ந்து பார்த்த பிறகா நாம நம்மோட மதத்திலே இருக்கோம்? எத்தனை பேர் நம்ம மதத்தின் எல்லா வேதங்களையும். மற்ற மத வேதங்களையும் படிச்சு தேறி இருக்கோம்? நம்மோடதயே யாரும் ஒழுங்கா, முழுமையா படிக்கலையே. நம்மோடதையே படிக்கலைங்கிற சமயத்தில மத்தவங்களோடதை எங்கே படிச்சிருக்கப் போறோம்? நிச்சயமா படிச்சது இல்லை. ஆனா எதையும் படிக்காமலேயே, முழுமையா தெரிஞ்சுக்காமலேயே நம்மோட மத வைராக்கியம், பக்தி வைராக்கியதுக்கு மட்டும் அளவே கிடையாது. இதுதான் உண்மையான நிலை.

பூ போட்டு எடுக்கணும்கிற அவசியமில்லை

ஆனா மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலை. இதுல ஒரு பரிதாபகரமான

ஒரு விஷயம் என்னென்னா, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டா நாம பூ வச்சுக்கிடக்கூடாது, நகை நட்டு போடக்கூடாது தாலியை கழட்டணும் பொட்டு வைக்ககூடாது, மஞ்சள் பூசப்பிடாது, பெயரை மாத்திக்கிடணும், வெள்ளைச் சேலை கட்டணுமேன்னு தயங்குறாங்க. அதுவும் இல்லாம நம்மோட சொந்தபந்தம், ஜாதி ஜனம் என்ன சொல்லுவாங்க, நம்மளை ஒதுக்கி வச்சிடுவாங்களோ, நம்ம பையனுக்கு, பொண்ணுக்கு ஒரு நல்ல வரனை, கிறிஸ்துவுக்குள்ளாற எங்கே போயி எப்படி தேடிக் கண்டுபிடிக்கிறது என்கிற பயம், தயக்கம் வேற. பூ எடுக்கிறது, பொட்டெடுக்கிறது, தாலியை கழட்டுறது, வெள்ளைச் சேலை கட்டுறது எல்லாம் நம் நாட்டில் யார் செய்வா? புருஷனை சாகக் கொடுத்தவங்க செய்வாங்க. கிறிஸ்துவுக்குள்ள வரும்போதே இப்படி ஒரு அமங்கலமாகவா வரணும்? நம்ம வீட்டுக்காரருக்கு இதுனால எதாவது ஒண்ணு ஆச்சுன்னா என்ன பண்றதுங்கிற ஒரு பயமும் இருக்கு. கிறிஸ்துவுக்குள்ளாற வந்தா இதையெல்லாம் நாம எடுத்திடணும்கிற அவசியம் இல்லை.

உள்ளத்தில் பரிசுத்தமே முக்கியம்

"மனுஷன் முகத்தை பார்ப்பான். கர்த்தரோ உன் இருதயத்தை பார்க்கிறார்"னு சத்திய வேதம் சொல்லுதே. நம்ம உள்ளத்திலேர்ந்து எடுத்து எறிய வேண்டிய விஷயம் ஆயிரத்தெட்டு இருக்குதே. கோபம், தாபம், எரிச்சல், வம்பு, வீம்பு, வைராக்கியம், பழிவாங்குகிற நினைப்பு என்று ஏராளம் இருக்குதே. இதையெல்லாம் எடுத்துப் போடாம, நாம நகையை மட்டும் கழட்டிட்டா நாம பரலோகம் போயிடுவோமா? பைத்தியக்காரத்தனம்! சொந்த பந்தம் பற்றி நாம ஏன் கவலைப்படணும்? நாங்க படாதபாடு படுகிற சமயத்தில் சொந்த பந்தம் என்ன ஹெல்ப் பண்ணிட்டாங்க? அவங்களா நம்மை சொர்க்கம் கொண்டு போகப் போறாங்க? இப்படி தேவையில்லாத நெறைய விஷயங்களைப் போட்டு நம்மை நாமே குழப்பிக்கிடுறோம்.

கிறிஸ்துவுக்குள் பெலப்பட்டேன்

நம்ம எதிர்காலம், நம்ம பிள்ளைங்க எதிர்காலம், மனைவி, அக்கா,

அம்மா, தம்பி தங்கச்சி, அக்கா பற்றி மட்டும் நாம கவலைப்பட்டா போதுமே. அவங்க நல்லா இருக்காங்களே நாம, சந்தோஷத்தோட வாழறவங்களோட நிம்மதியா இருக்க முடியும்? இப்படி பல விஷயங்களை பேசினார். மருத்துவர் என்னை கிறிஸ்துவுக்குள் வழிப்படுத்தி என்னுடைய பல சந்தேகங்களை நீக்கினார். அதுக்கப்புறம் நான் தொடர்ந்து சர்ச்சுக்கு போக ஆரம்பிச்சேன். பைபிள் வசனங்கள் படிச்சேன். ஜெபம் பண்ணினேன். கிறிஸ்துவுக்குள் அனுதினமும் வளர்ந்தேன்.

கடன் தொல்லை கழுத்தை நெரித்தது

அப்பாவுக்கு வேலை போச்சி. அப்பா ரிட்டயர் ஆகி வைத்திய செலவுகளும் நம்பி ஆனதுனால எங்களால சமாளிக்க முடியாம அப்பப்போ கண்டபடி ஓட்டிறதுக்கே அக்கம்பக்கத்துல தெரிஞ்சவங்ககிட்ட கடன் வாங்க வேண்டி வந்தது. அது வட்டியும் முதலுமா சேர்ந்து 3 லட்சத்துக்கு மேலே ஆயிடுச்சு. கடன் கொடுத்தவங்க எங்களை நெருக்க ஆரம்பிச்சிட்டாங்க. போதகர்கிட்ட சொன்னேன். உபவாசத்துல போட்டு ஜெபம் பண்ணுங்க. உங்க பிரச்சனைக்கு கண்டிப்பா ஒரு தீர்வு கிடைக்கும். ஒரு 30 நாள் உபவாசத்துல இருங்க. நானும் ஜெபிக்கிறேன் என்றார். நானும் ஒரு முழு விசுவாசத்தோட உபவாசத்துல இருந்து தினமும் ஜெபிக்க ஆரம்பிச்சேன். 30 நாட்கள் காத்திருக்க எனக்கு மட்டும் இல்லை. குழந்தையும் இல்லை. இருந்தாலும் ஜெபத்தோட போய் கடன் கொடுத்தவர்களிடம் 30 நாள் டைம் கேட்டேன். அவங்களும் ஒத்துக் கொண்டாங்க.

விசுவாசித்தால் அற்புதம் நடக்கும்

ஆனால் 30 நாளில் எப்படி இந்த 3 லட்ச கடனை அடைக்கப் போறோம் என்பது ஒரு பெரிய பாரமாக என் உள்ளத்தில் இருந்தது. ஒரு வாரம் ஆச்சு. இரண்டு வாரம் மூணு வாரம் ஆச்சு. எந்த அற்புதமும் நடக்கலை. அதுக்குண்டான அறிகுறியும் இல்லை. ஒவ்வொரு நாளும் போகப்போக மனம் பதறியது (மனசு 'கெதக் கெதக்'னு அடிச்சிக்கிட்டது) என்ன பண்ணப் போறோம் இன்னும் மூணு நாள் மட்டுமே இருக்கு. அதுக்கப்புறம் கடன்காரங்க வந்து கழுத்தை நெரிப்பாங்களே. நினைக்கப் பார்க்கவே பயமா

இருந்தது. ஆனா பேபி மாத்திரம் ரொம்ப நம்பிக்கையாக திருப்பி திருப்பிச் சொன்னாள். கண்டிப்பாக ஒரு அற்புதம் நடக்கும். விசுவாசியுங்க என்று கூறி வந்தாள்.

ஆண்டவர் அற்புதம் செய்வார்

'உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்'னு ஆண்டவர் சொல்லி இருக்கிறாரு. பொய் சொல்ல அவர் மனுபுத்திரன் அல்ல. சொல்லியும் செய்யாதிருப்பாரா? என் ஜெபத்தைக் கேட்டு அதிசயம் செய்து என் பிரச்சனையை தீர்த்ததுக்காக நன்றி என்று அட்வான்ஸா தேங்க்ஸ் சொல்லுங்க. வாயினால அறிக்கை செய்யுங்க. நீங்க அவர் மேலே எந்த அளவுக்கு விசுவாசம் வச்சிருக்கிங்கன்னு ஆண்டவர் பாக்கிறாரு. "நீங்கள் ஜெபம் செய்யும்போது எதைக் குறித்து ஜெபம் செய்கிறீர்களோ அதை பெற்றுக் கொள்வோம் என்கிற முழு விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுங்கள்'னு வேதம் கூறுகிறதே. முழு இருதயத்தோட நம்புங்க. ஆண்டவர் உங்க விசுவாசத்தை களப்படுத்துவார் என்று என்னை பலப்படுத்தினாள். அதே மாதிரியே நானும் அட்வான்ஸா நன்றி சொல்லி ஜெபித்து வந்தேன்.

ஜெபத்துக்குப் பதில் தருகிற தேவன் இயேசு

ஆச்சரியம் பாருங்க. என்கூட வேலை பார்த்த என் நண்பன் ராஜேந்திராவிடம் நான் என்னோட நிலையைச் சொல்லி ஹெல்ப் பண்ண முடியுமான்னு ஒரு மாசத்துக்கு முன்னாடி கேட்டிருந்தேன். நான் அப்படி கேட்டதைக்கூட நான் மறந்து போயிட்டேன். ஏன்னா நான் அந்த கம்பெனியை விட்டு வேற ஒரு இடத்தில வேலைக்கு சேர்ந்துட்டேன். அவர் போன் பண்ணி 'நீ கேட்ட பணம் ரெடி பண்ணிட்டேன். வந்து வாங்கிட்டுப் போ'ன்னு சொன்ன உடனே என்னால் என் காதுகளையே நம்பமுடியலை. 'தேங்க்யூ ஜீஸஸ்'னு போன்ல அவர்கிட்டேயே சொல்லிட்டேன். அவர் என்னென்னு கேட்டாரு. ஜீஸஸ்னு நான் சொன்னதைக் கேட்டு அவருக்கு ஆச்சரியம். அதுனாலதான் கேட்டார். "இயேசுகிட்டயும் நான் வேண்டிக்கிட்டேன். அதுனாலதான்னு சொல்லி சமாளிச்சேன்" உண்மையிலேயே அதிசயங்களை, அற்புதங்களை செய்கிற, ஜெபத்துக்கு பதில் தர்ற ஜீவனுள்ள தேவன்தான்ங்க ஜீஸஸ். ஓ... வாட் எ காட் ஹி இஸ்!

என்னையும் அறியாமல் என் கண்களில் கண்ணீர், பெற்ற தாயினும் அதிகமாக அன்பு காட்டுகிற ஒரு தேவன் அவர். இவ்வளவு நாளும் இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல, அன்புள்ள ஆண்டவரை நாம தெரிஞ்சுக்காம இருந்துட்டோமே.. இது தெரியாம எங்கே எங்கேயோ போயி நம்ம டயத்தையும், பணத்தையும் வேஸ்ட் பண்ணிட்டோமேன்னு நினைக்க நினைக்க வயித்தெரிச்சலா இருந்துச்சு. இன்னும் இந்த உண்மையுள்ள ஆண்டவரை, நமக்காக ஜீவனை விட்ட ஆண்டவரை புரிஞ்சுக்காத, தெரிஞ்சுக்காத, எதிர்க்கிற, மறுதலிக்கிற, எத்தனை கோடானுகோடி ஜனங்க இருக்கிறாங்க, அப்படி தெரிஞ்சுக்காததுனாலதான் நம்மளைப் போல துன்பத்திலும், துயரத்திலேயும் கஷ்டத்திலும், நஷ்டத்திலையும், கிடந்து அவதிப்படுறாங்க.

சுவிசேஷம் அறிவித்தல் நாம் செய்கிற நன்றிக்கடன்

அவங்க ஏற்றுக்கிட்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, நம்மளைப்பத்தி அவங்க என்ன தப்பா சொன்னாலும் சரி, அதைப்பற்றி கொஞ்சங்கூட கவலைப்படாம, இயேசுவை அறிந்த ஒவ்வொருவருமே அவரோட அன்பை அவர் நமக்காக சிந்தின இரத்தம் கொடுத்துள்ள பாவமன்னிப்பு, இலவச இரட்சிப்பு பற்றி சொல்லியே ஆகணும். அதுதான் அவருடைய தியாகத்துக்கு நாம செய்யக்கூடிய ஒரு சின்ன நன்றிக் கடன். இது நம்ம தலைமேலே விழுந்த கடமை. ஆனா இதை நாம முக்கால்வாசிப்பேர் செய்யுறதே இல்லை. நம்ம தேசத்தில சுவிசேஷம் பரவாம இருக்கிறதுக்கு முக்கிய காரணமே இதுதான். நிர்விசாரம். ஆத்துமபாரம் இல்லை.

இயேசுவைப் பற்றி சொல்லலைன்னா, அது பெரிய குற்றம்

ஆண்டவர் செய்த நன்மைகளை நாம அடுத்தவங்களுக்கு சொல்லாம இருக்கறது எவ்வளவு பெரிய குற்றம்? **'இந்த நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். நாம் மவுனமாக இருந்து பொழுது விடியும் மட்டும் காத்திருந்தால், குற்றம் நம்மேல் 'சுமருமே' என்று ராஜா 7;9** சொல்லுது. **'இது அநுக்கிரககாலம்' – (சங் 69;13), 'இது அனுப்புக்காலம்' – (எரே 51;33). 'இது சுதந்தரிக்கும் காலம்' – (தாளி 7;21), 'இது தயவு செய்கிற காலம்' – (சங் 102;13). 'இது குறிக்கப்பட்ட காலம்' – (யோபு 7;1). ஆனா** இதைப் புரிஞ்சுக்காம நாம, நாம மட்டும்

இரட்சிக்கப்பட்டா போதும் என்று யார்கிட்டேயும் இயேசுவைப்பத்தி சொல்லாம இருக்கோம். அவரைப் பற்றிப் பிடித்துக் கொள்ளாம இருக்கோம்.

இயேசுவை ஏற்றுக்கொண்டதால எனக்கு பயங்கர எதிர்ப்பு

நான் முழுமைய்யா கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானமும் எடுத்த உடனே என் வீட்ல பயங்கர எதிர்ப்பு வந்தது. என்னோட சொந்த பந்தமும் என்னை கரிச்சுக் கொட்டினாங்க. நான் எதைப் பற்றியும் கவலைப்படலை. என் திருமணத்திற்காக பெண் பார்க்க ஆரம்பிச்சாங்க எங்க வீட்ல. இந்து மதத்தில பெண் பார்த்தாங்க. நான் 'எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தா, அது ஒரு கிறிஸ்தவப் பெண்ணோடதான் நடக்கும். வேறு யாரு கூடவும் இல்லை. அதுவும் கிறிஸ்தவ முறைப்படிதான் நடக்கணும். இல்லேண்ணா எனக்கு கல்யாணமே வேண்டாம்'னு அடிச்சுச் சொல்லிட்டேன்.

நம் தேவைகளை எல்லாம் சந்திக்கிற தேவன்

நானும் ஒரு கிறிஸ்தவப் பெண்ணை தேடி அலையும்படியாக ஆண்டவர் என்னை வைக்காம ஏற்கனவே கர்த்தர் பேபியை எனக்கு அறிமுகப்படுத்தி ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளும்படியான ஒரு சூழலையும் முன்னமேயே செஞ்சுட்டாரு. ஆண்டவர் சகலத்தையும் முன் குறித்து ஒழுங்கும் கிரமமுமாக செய்கிறவர் அல்லவா? நான் பேபியிடம் என்னை திருமணம் செய்துகொள்ள சம்மதமா என்று கேட்டேன். என் தாயிடம் கேளுங்கள் என்றாள். அவளின் வீட்டிற்குப் போயி முறைப்படி கேட்டோம். அவளின் அம்மாவும் சம்மதம் தெரிவித்தார்கள். கிறிஸ்தவ முறைப்படி சர்ச்சிலேயே எங்கள் திருமணம் 2014 இல் நடந்தது. கர்த்தர் எனக்கு ஒரு நல்ல மனைவியை கொடுத்ததற்காக கோடானுகோடி நன்றி செலுத்துகிறேன்.

ஏழு வருட புகைப்பழக்கத்திலிருந்து விடுதலை

ஒருநாள் என் கண் முன்னே என் பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசு கிறிஸ்துவைப் பார்த்தேன். கண்ணீருடன் சொன்னேன். மரித்து உயிர்த்தெழுந்த தேவனே,

என்மேல் நீர் வைத்திருக்கும் அளவில்லாத அன்பிற்காக நன்றி என்றேன். ஏழு வருட கால புகைப்பழக்கத்திற்கு அடிமையாய் இருந்த நான், அன்றே தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் சந்நிதியில் 'இனி நான் புகைபிடிக்க மாட்டேன்' என்று அறிக்கை செய்தேன்.

"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு"

- 2 கொரிந்தியர் 3:17

புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்றேன். கடன்களை எல்லாம் கட்டி முடித்தேன். இரக்கம் பாராட்டின இயேசு கிறிஸ்துவுக்கு மனதார நன்றி சொன்னேன். ஞாயிறுதோறும் தேவாலயம் செல்லவும் பரிசுத்த வேதாகமத்தை அதிகம் வாசிக்கவும், ஜெபிக்கவும் ஆரம்பித்தேன்.

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்" என்று - சங்கீதம் 46:1 நமக்கு உறுதிமொழி கொடுக்குதே.

30 வருட காலம் வாடகை வீடுகளில் இருக்கிறோம். இரண்டு பேரும் அரசு வேலை செய்தும் சொந்தமாக ஒரு வீடு இல்லையே என்று என் தாயும், தந்தையும் மிகவும் வருத்தப்பட்டார்கள். 2012 முதல் எங்களது 3 ஏக்கர் நிலத்தை விற்க எவ்வளவோ முயற்சி எடுத்தோம், எல்லாம் வீணாகவே முடிந்தது.

2013 செப்டம்பர் மாதம் முதல் எங்கள் நிலம் விற்க வேண்டும், சொந்தமாக ஒரு வீடு வாங்க வேண்டும், என் தந்தையார் குடிப்பழக்கத்திலிருந்து மீள வேண்டுமென்று ஜெபிக்கத் தொடங்கினேன். தினமும் ஜெபித்தேன். எனக்காக பேபியும் ஜெபித்தாள்.

இயேசுவால் எல்லாம் கூடும்

2013 அக்டோபர் மாதம் என் தந்தையார் ஒரு நாள் எனக்கு போன் செய்தார். "3 ஏக்கர் நிலத்தையும் ஒருவர் வாங்க ஒப்புக்கொண்டுவிட்டார். நாளை அட்வான்ஸ் தருகிறார். நீயும் வா"

என்று சொன்னார். எத்தலனயோ நாட்கள், வருடங்கள் என் வேண்டுதல்களைக் கேட்க இவ்வுலகில் யாருமே இல்லை, என் கண்ணீரை துடைக்க எந்த கடவுளும் இல்லாமல் இருந்தேன். இப்போது இது தேவகிருபையினால் மாத்திரமே நடந்துள்ளது. தேவாலயம் சென்று "என் க்ண்ணீரைக் கண்டு, என் சத்தத்தையும் என் பிராத்தனையையும் கேட்டு அருளி, கிருபை பாராட்டின இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி சொன்னேன்.

'மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்' என – லூக்கா 18;27 இல் பார்க்கிறோமே.

பதில் தரும் பகவான் இயேசு

2013 நவம்பர் நாங்கள் வீடு வாங்க 5, 6 வீடுகளைப் பார்த்தோம். வீட்டிற்காக ஜெபித்துக் கொண்டே இருந்தேன். இயேசு கிறிஸ்துவி னிடத்தில் உங்கள் சித்தப்படி நடத்தும் அய்யா என்று வேண்டிக்கொண்டேன். ஒரு நாள் ஒரு வீட்டைப் பார்க்கச் சென்றோம். கீழே ஒன்று, முதல் மாடியில் ஒன்று என்று இரு வீடுகள். என் தந்தையார், வீட்டுச் சொந்தக்காரரிடம் கீழே பேசிக் கொண்டிருந்தார். நான் மேலே மாடிக்குச் சென்று சுற்றிப் பார்த்தேன். வீட்டிற்கு அருகே ரயில் தண்டவாள பாதையை அடுத்து ஒரு வீட்டின் மாடியில் தண்ணீர் தொட்டியில் எழுதியிருந்தது. **"தேவனாலே எல்லாம் கூடும்" என்று என் தேவன் எனக்கு அவரின் சித்தத்தை உணர்த்திவிட்டார்.**

என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவு அன்புள்ள தேவன் என்பதை நான் ருசித்துப் பார்த்தேன். ஆனந்தக் கண்ணீருடன் நான் நன்றி சொல்லி கீழே இறங்கி கீழ் தளத்திற்கு வந்தேன்.

ஒன்று கேட்டேன். இரண்டாகத் தந்தார்

என் தந்தையார் சொன்னார். "இந்த வீட்டை வாங்கி விட்டேன்" என்று. ஒரு வீட்டிற்காக ஜெபித்தேன். என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரு வீட்டைத் தந்துவிட்டார். பக்கத்தில் யாரோ ஒரு கிறிஸ்தவ வீட்டிலிருந்து ஒரு பாட்டுச் சத்தம் கேட்டது. என் உடம்பே

சிலிர்த்தது. 'உன்னை நம்பி வந்தேன். நான் வெட்கப்படலை. உன் தயை என்னை கைவிடலை. வெறுங்கையோடு கடந்து வந்தேன். இரு பரிவாரம் எனக்குத் தந்தீர். ஏல் எலோ ஹிம்... ஏல் எலோஹிம்' என்று யாக்கோபு நன்றி சொல்லி துதித்ததுபோல அப்பாடல் இருந்தது. அது எவ்வளவு உண்மை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மாத்திரமல்ல. இப்போதும் அவரை நோக்கிப் பார்க்கின்ற முகங்கள் வெட்கப்பட்டுப் போகாதபடி ஆசீர்வதிக்கிறரே! இயேசு அன்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் அல்லவா?

என் தந்தையின் குடிப்பழக்கம் மறைந்தது

என் கர்த்தர் எவ்வளவு அன்புள்ள, இரக்கமுள்ள தேவன் பார்த்தீர்களா? அது மட்டுமல்ல, மெல்ல மெல்ல என் தந்தை 30 வருட குடிப்பழக்கத்திலிருந்து பூரணமாக விடுதலையானார். என் தாயும் நல்ல ஆரோக்கியத்துடனும் நல்ல மனநிலையுடன் ஆனார் நான் கேட்டதையும், அதற்கு அதிகமாகவும் தந்து எங்கள் கண்ணீரை துடைத்து இரக்கமும் கிருபையும் பாராட்டி எங்கள் மேல் அளவில்லாத அன்பையும், சமாதானத்தையும் தந்து வழி நடத்துகிற என் தேவனுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று யோசித்தேன். எந்தவொரு பூஜையும், பரிகாரமும் கேளாத என் கர்த்தராகிய ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 04-01-2014இல் ஞானஸ்நானம் பெற்றேன். அர்ஜூன் சாமுவேல் ஆனேன்.

கோடி நன்றி சொன்னாலும் ஈடு ஆகாது

பிப்ரவரி 2014இல் நாங்கள் இயேசு கிறிஸ்து தந்த எங்கள் புதிய சொந்த வீட்டிற்கு குடி பெயர்ந்தோம். எங்கள் ஆத்மாக்களை அழிவிலிருந்து பாதுகாத்து அம்மாவிற்கு நல்ல ஆரோக்கியமும், நல்ல மனநிலையும், அப்பாவின் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையும், சொந்த வீடும், தேவ சமாதானமும் தந்த எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றிகள் கோடி சொன்னாலும் இது நிகராகாது.

பிள்ளை செல்வம் தந்தார்

ஏப்ரல் 2014இல் பேபியை திருமணம் செய்துகொண்ட எனக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கர்ப்பத்தின் கனியை ஆசீர்வதித்தார். பிப்ரவரி 2015இல் எங்களுக்கு 'மிஷல் சாமுவேல்' என்னும் அழகான பெண்குழந்தையை தந்தருளினார். தேவ சமாதானமும், தேவ ஆசீர்வாதமும் எங்கள் குடும்பத்தில் நிரம்பச் செய்தார்.

இழந்ததை பன்மடங்காக திருப்பித் தந்தார்

1997ஆம் ஆண்டு முதல் கடவுளைத் தேடி தொலைந்து போன என்னையும் எங்கள் குடும்பத்தையும் மீட்டெடுத்த இயேசு கிறிஸ்துவிற்கு எத்தனை கோடி நன்றிகளும் ஸ்தோத்திர பலிகள் சொன்னாலும் அது போதாது. என் இரு சகோதரர்களை நான் இழந்திருந்தாலும் இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு எண்ணி முடியாத அளவிற்கு அன்பு காட்டும் சகோதரர்களையும், சகோதரிகளையும் இப்போது தந்துள்ளார். எங்களைப் போல் எத்தனையோ ஆத்துமாக்கள் கண்ணீரோடும் கவலையோடும், நோய் நொடிகளோடும், துன்பம், துயரத்தோடும் நிம்மதி இல்லாமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களும் எங்களைப்போல சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமே என்கிற ஒரு ஆதங்கத்தில் இதை எழுதுகிறேன். மதமாற்றத்துக்காக அல்ல.

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

உங்களின் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வாக, இதைக் கூறுகிறேன். எங்கெங்கோ உங்கள் பிரச்சனைகள் தீர சென்றீர்கள். இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்றால் இயேசுவிடம் வந்து பாருங்கள். அவரை நோக்கி கூப்பிடுங்கள். உங்கள் அருகில் உள்ள ஒரு ஆவிக்குரிய திருச்சபைக்கு செல்லுங்கள். அனுதினமும் வேதத்தை வாசியுங்கள். உங்கள் துன்பங்களுக்கு காரணமாய் இருக்கிற இதுவரை நீங்க செய்த பாவங்களை எல்லாம் தேவனிடம் அறிக்கை செய்துவிட்டு

விடுங்கள். 'என்னை சோதித்துப் பாருங்கள்' என்று சொன்ன தேவன், நம் எல்லோரையும் நேசிக்கின்ற, நமக்காக இரத்தம் சிந்தி தன் ஜீவனைக் கொடுத்த தேவன் இயேசு ஒருவர் மாத்திரமே. உங்கள் கஷ்டங்களையும் வேதனைகளையும் இயேசு கிறிஸ்துவிடத்தில் சமர்ப்பியுங்கள். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்வார்.

கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிப்பார்

“என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு வெளிப்படுத்துவேன்” என்று ஏரேமியா 33:3 வில் ஆண்டவர் நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறார்.

வானத்தையும் பூமியையும் சகல ஜீவராசிகளையும் நம்மையும் படைத்து காத்து போஷித்து வருகிற அந்த இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லா நாமத்தில் பரலோக பிதாவிடம் வேண்டிக் கொள்கிறேன். இப்புத்தகத்தை படிக்கிற, படித்துவிட்டு மற்றவர்களுக்கு கொடுக்கின்ற அனைவரையும் தேவ கிருபையும் அன்பும் சூழ்ந்து கொள்ள ஜெபிக்கிறேன்.

அன்புடன் உங்கள் நலம் விரும்பும் உங்கள் சகோதரர்

தேதி : 15-2-18 M.அர்ஜுன் சாமுவேல்